நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விளைச்சல் குறைவு: உயருகிறது மாம்பழத்தின் விலை**

First Published : 03 May 2011 01:52:29 AM IST



கே.ஜி.கண்டிகை பகுதியில் மரங்களில் குறைவாகவே காய்த்திருக்கும் மாங்காய்கள்.

திருத்தணி, மே 2: நடப்பாண்டில் விளைச்சல் குறைவாக இருப்பதால் மாம்பழத்தின் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

÷திருத்தணி, பள்ளிப்பட்டு பகுதிகளை சுற்றியுள்ள கிராமங்களில் வறட்சியின் காரணமாக பெரும்பாலான இடங்களில் மாமரங்களில் பூக்கள் பிடிப்பது குறைந்தது மட்டுமின்றி, பிஞ்சுகளும் பழுத்து உதிர்வதால் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

÷திருத்தணி சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 3 ஆயிரம் ஹெக்டேருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் விவசாயிகள் மா சாகுபடி செய்துள்ளனர். அதில், திருத்தணி தாலுகா, செருக்கனூர் ஒன்றியத்தில் மாம்பாக்கசத்திரம் கிராமத்தில் 12 ஏக்கரிலும், கன்னிகாபுரம் கிராமத்தில் 20 ஏக்கரிலும், கே.ஜி. கண்டிகை கிராமத்தில் 22 ஏக்கரிலும், கோரமங்களம் கிராமத்தில் 18 ஏக்கரிலும், ஆர்.கே.பேட்டை பகுதியில் சுமார் 50 ஏக்கரிலும், நொச்சிலி கிராமப் பகுதியில் 80 ஏக்கரிலும், பொதட்டூர்பேட்டையின் சுற்றுப்புற கிராமங்களில் 75 ஏக்கர் நிலப்பரப்பில் மா மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

÷திருத்தணி, பள்ளிப்பட்டு தாலுக்கா வறண்ட பகுதி என்பதால் மானாவாரி நிலங்களில் மட்டுமே 50 சதவீத மா மரங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் ஆர்.கே.பேட்டை, பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு, புச்சிரெட்டிப்பள்ளி, புதுகீச்சலம், மத்தூர் உள்ளிட்ட பகுதியில்

இருந்து மல்கோவா, இமாம்பசந்த், அல்போன்ஸô ரக மாம்பழங்கள் வெளி மாநிலங்களுக்கும், செந்தூரா, நீலம், பெங்களூர் ரக மாம்பழங்கள் ஜூஸ் கம்பெனிகளுக்கும் அனுப்புவதற்காக வியாபாரிகள் மொத்த விற்பனையாகவும், சில்லறை விற்பனையாகவும் வாங்கிச் செல்வார்கள்.

÷சில ஆண்டுகளாகவே திருத்தணியை சுற்றியுள்ள 50-க்கும் மேற்பட்ட கிராமப் பகுதிகளில் மா விளைச்சல் அமோகமாக இருந்து வருகிறது. ஒரு மா மரத்தில் 1,000 முதல் 1200 மாம்பழங்கள் வரை கிடைக்கும்.

÷சென்ற ஆண்டு திடீரென சூறாவளிக் காற்றுடன் பெய்த கனமழையால் மரத்தில் பூக்கள் அடியோடு மரத்திலிருந்து உதிர்ந்து போனது. தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக மாமரத்தில் பூக்கள் குறைந்த அளவே பூத்திருக்கிறது. அவற்றிலும் 70 சதவீத பூக்கள் வறட்சியால் உதிர்ந்து விட்டது. மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்த மாமரங்கள் தண்ணீர் இல்லாமல் கருகிவிட்டன.

÷நீர்ச்சத்து இல்லாததால் பிஞ்சுகள் மரத்திலேயே பழுத்து உதிர்கிறது. அதனால், கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் மா உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. இதனால் மாம்பழத்தின் விலை உயரும் என வியாபாரிகள் கருதுகின்றனர்.

**கோடை மழை காலத்தில் மல்பரி நடவு செய்யலாம்**

First Published : 02 May 2011 01:03:04 PM IST

தேனி, மே 1:÷தேனி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கோடை மழையால், மல்பரி பயிரை சாகுபடி செய்வதற்கு ஏற்ற பருவநிலை நிலவி வருவதாகப் பட்டு வளர்ச்சித் துறை அலுவலர்கள் கூறினர்.

÷இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியதாவது:÷மாவட்டத்துக்கு உள்பட்ட கோட்டூர், உப்புக்கோட்டை ஆகிய பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவில் பட்டு வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

÷இப் பகுதியில் வெண்பட்டு உற்பத்தியை அதிகரிக்கப் பட்டு வளர்ச்சித் துறை சார்பில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மாவட்டத்தில் மொத்தம் 1 லட்சத்து 5 ஆயிரம் கிலோ வெண்பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1 கிலோவுக்கு ரூ. 416 வரை விலை கிடைத்தது.

÷இந்த ஆண்டு பட்டு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், பட்டுப்புழுக்களுக்கு உணவாக பயன்படும் மல்பரி பயிரை கூடுதலாக 650 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென பட்டு வளர்ச்சித் துறை சார்பில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 18 லட்சம் மல்பரி நாற்றுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

÷மல்பரி நாற்றுகள் பொதுவாக ஜூன் மாதம் நடவு செய்யப்படும். கடந்த சில நாள்களாக மாவட்டத்தில் பரவலாக கோடை மழை பெய்து வருவதால் தற்போது மல்பரி நடவு செய்வதற்கு ஏற்ற பருவ நிலை உள்ளது.

எனவே பட்டு வளர்ப்பு விவசாயிகள் மல்பரி நாற்று நடவு பணியை முன்கூட்டியே தொடங்கலாம். மேலும், இந்த ஆண்டு பருவமழை போதிய அளவு பெய்வதற்கு வாய்ப்பு உள்ளதால், காற்றில் ஈரப்பதம் நீடித்திருப்பதற்கு வாய்ப்பாக அமையும்.

பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபடுவதற்கு விரும்பும் விவசாயிகள் தொழில்நுட்ப உதவிகள், அரசு மானிய உதவிகள் பெறுவதற்கு தேனி அருகே முத்துத்தேவன்பட்டியில் உள்ள பட்டு வளர்ப்புத் துறை அலுவலகத்தில் நேரிலும், பட்டு வளர்ப்புத் துறை உதவி இயக்குநர் பி.டி. மோகனை, 97914 54519 என்ற செல்போன் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

தினமலர்

**37 ரகம் நெல் சாகுபடி செய்யவிவசாயிகள் அதிக ஆர்வம்**

பதிவு செய்த நாள் : மே 03,2011,04:44 IST

விழுப்புரம்:தோகைப்பாடி கிராம விவசாயிகள் 37 ரகம் நெற்பயிர் சாகுபடி செய்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.கோடை வெயில் வாட்டி வந்த நிலையில் பொதுமக்கள் மட்டுமின்றி விவசாயிகளும் பெரும் அவதியடைந்து வந்தனர். கடந்த சில தினங்களுக்கு முன் விழுப்புரம் பகுதியில் பெய்த திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.விழுப்புரம் அடுத்த தோகைப்பாடி கிராமத்தில் கோடை வெயில் சுட்டெரித்ததால் தண்ணீர் ஊற்று குறைந்தது. அப்பகுதி விவசாயிகள் தண்ணீர் ஊற்று இல்லாமல் மோட்டார் மூலம் தண்ணீர் இறைத்தும், பாசனத்திற்கு போதிய அளவு தண்ணீரின்றியும் அவதியடைந்து வந்தனர்.

இந்நிலையில் திடீரென பெய்த மழையால் தோகைப்பாடி கிராமத்தில் மோட்டார் இல்லாமல் இயற்கையாகவே நிலத்தில் தண்ணீர் ஊற்று பெருக்கெடுத்துள்ளது. இதை சாதகமாக பயன்படுத்தி

அப்பகுதியில் உள்ள விவசாயிகள் நெல் 37 ரகம் சாகுபடி செய்வதற்கான பணிகளை ஆர்முடன் துவங்கி உள்ளனர்.இதற்காக பவர் டிரில்லர் இயந்திரம் மூலம் ஏரோட்டும் பணியை துவக்கியுள்ளனர். இப்பகுதியில் பெரும்பாலான விவசாயிகளும் 37 ரக நெல் சாகுபடி பயிரிடுவதில் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

**கோடை மழையை பயன்படுத்தி வேர்க்கடலை சாகுபடி தீவிரம்**

பதிவு செய்த நாள் : மே 03,2011,04:57 IST

செஞ்சி:செஞ்சி பகுதியில் பெய்த கோடை மழையை பயன்படுத்தி விவசாயிகள் வேர்க்கடலை விதைப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.செஞ்சி பகுதியில் கடந்த வாரம் பலத்த கோடை மழை பெய்தது. இத னால் தண்ணீர் குறைவாக இருந்த ஏரிகளிலும் நீர் மட்டம் உயர்ந்தது. கோடையிலும் கிணறுகளின் நீர்மட்டம் திருப்திகரமாக உள்ளது. இதனால் இந்த ஆண்டு விவசாயம் "கை' கொடுக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.
நெல் பயிருக்கு அடுத்தபடியாக வேர்க்கடலை பயிர் செய்யும் செஞ்சி பகுதி விவசாயிகள் சமீபத்தில் பெய்த கோடை மழையை பயன்படுத்தி இறவை வேர்கடலை விதைப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கோடை மழையினால் வேர்க்கடலை விதைப்பதற்கு ஏற்ப மண்ணின் ஈரப்பதம் உள்ளது. எனவே செஞ்சி பகுதி விவசாயிகள் புழுதி ஓட்டி சமப்படுத்தி வேர்க்கடலை விதைத்து வருகின்றனர்.இதனுடன் ஊடுபயிராக ஊளுந்து, துவரை, பச்சைபயறு, காராமணியையும் விதைத்து வருகின்றனர். கிணறுகளில் நீர்மட்டம் குறையாமல் இருப்பதால் கடந்த ஆண்டை விட இந்தாண்டு அதிகளவிற்கு வேர்க்கடலை சாகுபடி இருக் கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இயற்கை விவசாயம் செய்ய கடைபிடிக்கும் முறைகள்**

பதிவு செய்த நாள் : மே 03,2011,00:35 IST

கம்பம் : இயற்கை விவசாயம் செய்ய விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் குறித்து, விவசாயிகள் கருத்தரங்கில் விளக்கப்பட்டது. "இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை விவசாயத்திற்கான இடுபொருட்கள் அறிமுகம்' என்ற தலைப்பில், விவசாய கருத்தரங்கம் கம்பத்தில் நடந்தது. உத்தமபாளையம் கருத்தராவுத்தர் கல்லூரி செயலாளர் தர்வேஷ்முகையதீன் தலைமை வகித்தார். கல்லூரி ஆட்சிமன்ற குழு தலைவர் ஷேக்மைதீன் முன்னிலை வகித்தார்.

கன்னிகா வரவேற்றார். கருத்தரங்கில், இயற்கை விவசாயத்தின் அவசியம் குறித்து விளக்கப்பட்டது. மண்ணில் பல பயிர்கள் பயிரிட்டு மடக்கி உழுதல், மண் புழு வளர்த்து மண்புழு உரமிடுதல், பயிறுக்கேற்றபடி சொட்டுநீர் பாசனம் அமைத்தல், தோட்டத்தை சுற்றிலும், தோட்டத்திற்குள்ளேயும் காற்று தடுப்பு அமைத்தல், நவீன இயற்கை விவசாய இடுபொருட்களை பயன்படுத்துதல் முக்கியமானது. இதற்கென யுனோ என்ற நிறுவனம் பயோகேர், ரூட்பிளஸ் உள்ளிட்ட பல இயற்கை விவசாய இடுபொருட்களை அறிமுகம் செய்துள்ளது. விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் ஈடுபடும் போது, அவை பயன்படும் என தெரிவிக்கப்பட்டது. விவசாயிகள் பலர் பங்கேற்றனர். முன்னோடி விவசாயிகள் ரெங்கபாபு, நத்தர்மீரான் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**பருத்தி சாகுபடி அதிகரிப்பு பயறுவகை சாகுபடி சரிவு**

பதிவு செய்த நாள் : மே 03,2011,00:26 IST

தேனி : தேனி மாவட்டத்தில் பயறு வகை சாகுபடியினை குறைத்துக் கொண்ட விவசாயிகள் பருத்தி, மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறி வருகின்றனர். மாவட்டம் முழுவதும் பயறுவகை சாகுபடியினை அதிகரிக்க விவசாயத்துறை தனி திட்டம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை, உரம் உட்பட பல்வேறு சலுகைகள் செய்து வருகிறது. ஆனால் விவசாயிகள் ஒத்துழைப்பு இல்லாததால் இத்திட்டத்தில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. பயறு வகை சாகுபடிக்கு விவசாய தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் தேவை. தவிர பூச்சித்தாக்குதல் உட்பட பராமரிப்பு செலவுகளும் அதிகம். ஆனால் இதற்கு ஏற்ப விலை கிடைக்காததால் விவசாயிகள் பயறு வகை சாகுபடிக்கு ஆர்வம் காட்டவில்லை. மாறாக பருத்தியில் தற்போது வீரிய ரக விதைகள் கிடைப்பதாலும், விலை கிலோவிற்கு 50 ரூபாய்க்கும் மேல் கிடைப்பதாலும் பயறு வகை சாகுபடியினை கைவிட்ட விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்து வருகின்றனர். இதனால் பருத்தி சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது. மக்காசோளம் சாகுபடியிலும் பராமரிப்பு செலவு குறைவு, நோய் தாக்குதல் குறைவு போன்ற காரணங்களால், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே மக்காச்சோள சாகுபடி பரப்பும் அதிகரித்து வருகிறது.

**உணவு பதப்படுத்துதல் தொழில்: மகளிர் சுய உதவிகளுக்கு ரூ.50 லட்சம் மானியம்**

பதிவு செய்த நாள் : மே 03,2011,00:19 IST

விருதுநகர் : தமிழகத்தில் உணவு பதப்படுத்தும் தொழில் செய்யும் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 50 லட்ச ரூபாய் வரை மானியமாக வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறை, உணவு பதப்படுத்துதல் தொழில் மேம்படுத்தப்பட உள்ளது. இதில் ஈடுபடும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு, அதிகபட்சமாக 50 லட்ச ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். தகுதியுள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் திட்ட விபரங்களுடன் விண்ணப்பிக்க அந்தந்த மாவட்ட மகளிர் திட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. காய்கறி, பழக்கடைகள், பால், கோழிப்பண்ணைகள் அமைத்தல், இறைச்சி பதப்படுத்துதல், கடல் சார் உயிரினங்கள் விற்பனை செய்தல், பேக்கரி, விரைவு உணவு வகைகள், குளிர்பானங்கள் தயாரித்தல், ரைஸ் மில், சமையல் எண்ணெய் தயாரித்தல் போன்ற தொழில்கள் செய்ய முன் வரலாம். திட்ட அறிக்கையை வங்கிகள் மூலம் அளித்தால் அந்த வங்கிக்கு மானியம் வழங்க உணவு பதப்படுத்துதல் துறை முன்வரும் என தெரிவித்துள்ளது. தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 33 சதம் மானியம் வழங்கவும் முடிவு செய்துள்ளது.

**கோவில்பட்டி பகுதியில் சூரியகாந்தி அமோக விளைச்சல் : விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 03,2011,05:09 IST

கோவில்பட்டி : விவசாயிகளின் நஷ்டத்தை ஈடுகட்டி வாட்டத்தை போக்கும் வறட்சிப்பயிரான சூரியகாந்தி கோவில்பட்டி பகுதியில் நல்ல விளைச்சல் கண்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி பகுதியில் பெரும்பாலும் மானாவாரி விவசாயமே பிரதானமாக இருந்து வருகிறது. இப்பகுதியில் லட்சக்கணக்கான ஏக்கரில் நடந்து வரும் மானாவாரி விவசாயத்தை நம்பி ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் கோவில்பட்டி பகுதியில் பெய்யும் மழையின் அளவு குறைவதும், தேவையற்ற நேரத்தில் அளவிற்கு மிஞ்சிய மழை பெய்வதும், பருவத்தில் மழை கிடைக்காமல் பயிர்கள் வாடுவதும், விவசாயிகள் நம்பிக்கை இழக்கும் நேரத்தில் திடீரென மழை பெய்து வாடிய பயிர்கள் தழைத்தாலும் ஊட்டமின்றி பெயருக்கு விவசாயம் நடைபெறுவதும் வழக்கமாகி விட்டது. கடந்தாண்டு விவசாய பருவத்திலும் இதே நிலைதான் இருந்ததாக விவசாயிகள் தரப்பில் வருந்துகின்றனர்.

இந்நிலையில் கோவில்பட்டி பகுதியில் மேலக்கரந்தை, தாப்பாத்தி, முத்துலாபுரம், சிந்தலக்கரை, அயன் வடமலாபுரம், வானரமுட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சூரியகாந்தி பயிரிடப்பட்டது. மொத்தத்தில் நூறுநாள் பயிரான சூரியகாந்தியை கடந்த தை மாத அறுவடைக்கு பின்னர் விதைத்துள்ளனர். இதையடுத்து பத்து நாட்களில் செடி முளைத்து, அடுத்த 30 நாட்களில் பூப்பிடித்துள்ளது. இந்த தருணத்தில் தான் கவனமாக இருந்து செடிகளில் பிடித்துள்ள பூவில் ஏற்பட்டிருக்கும் புழுக்களை தூய்மையான வெள்ளை பருத்தித் துணியால் சுத்தம் செய்து விடுகின்றனர். தொடர்ந்து சூரியகாந்தி பூவில் திரட்சியுடன் வித்துக்கள் உருவாகி சுமார் 90 டூ 100 நாட்களில் அறுவடைக்கு தயாராகியுள்ளது.
கோவில்பபட்டி பகுதியில் பெரும்பாலான இடங்களில் சூரியகாந்தி பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயாராக வித்துக்கள் செடியிலேயே முற்றும் வரை வைத்து காத்திருக்கின்றனர். இன்னும் ஓரிரு நாட்களில் அறுவடை செய்துவிடும் நிலையில் இருப்பதாலும், மார்க்கெட் நிலவரப்படி சூரியகாந்தி குவிண்டால் அதிகபட்சம் ரூ.5500க்கும் விலையிருப்பதாலும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.மொத்தத்தில் கோவில்பட்டி பகுதியில் கடந்தாண்டு பெய்த மழையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டுவர சூரியகாந்தி பயிர்கள் கைகொடுத்து தற்போது அறுவடைக்கு தயாராக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கோடை மழையால் நெற்பயிர் பாதிப்பு:நிவாரணம் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : மே 02,2011,23:58 IST

சிறுபாக்கம்:சிறுபாக்கம் பகுதியில் @காடை மழையால் பாதிக்கப்பட்ட நெற் பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.சிறுபாக்கம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் ஏ.டி.டி., 36, ஆடுதுறை 35, 43 ஆகிய ரக நெல் பயிர்களை விவசாயிகள் அதிக அளவில் பயிரிட்டிருந்தனர். நெற்பயிர்கள் முதிர்ந்து அறுவடைக்குத் தயாராக இருந்த நேரத்தில், கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கோடை மழையில் நெற்பயிர்கள் மூழ்கின.இதனால் நெல்மணிகளில் முளைப்பு ஏற்பட்டும், சேற்றில் புதைந்தும் நாசமானது. பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து பயிரிட்டு அறுவடைக்குத் தயாரக இருந்த நேரத்தில் மழையால் பயிர்கள் பாதித்ததால் விவசாயிகள் கவலையடைந்தனர்.

**மழையால் பட்டுச்செடி வளர்ப்போர் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 02,2011,21:41 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுபுற பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக பெய்து வரும் மழையால், பட்டுச்செடி வளர்க்கும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.பொள்ளாச்சி பட்டு வளர்ச்சி துறை உதவி பட்டு ஆய்வாளர் ராஜேந்திரன் கூறியதாவது: காலம் தவறி தற்போது பெய்த மழை, பட்டுசெடி வளர்க்கும் விவசாயிகளுக்கு சாதகமாக அமைந்துள்ளது. பட்டுசெடி வளர்க்க மழை காலம் உகந்ததாக கருதப்படுகிறது. எனவே, இந்த காலத்தில் விவசாயிகள் பட்டுசெடி நடலாம். மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழக பட்டு வளர்ச்சி துறை சார்பில் பட்டுத்துறையின் வளர்ச்சிகாக மக்களுக்கு பல மானியங்களை வழங்கி வருகிறது. நடவு மானியமாக ஒரு ஏக்கருக்கு 4 ஆயிரத்து 125 ரூபாய் வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனத்துக்காக ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரமும், "ஷெட்' கட்ட 1,000 சதுரடிக்கு 50 ஆயிரம் ரூபாய் மானியமாக தரப்படுகிறது. இத்துடன் விவசாயிகளுக்கு பயனுள்ள விதமாக 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கருவிகள் வழங்கப்படுகிறது. இளநிலை ஆய்வாளர்களால் பொள்ளாச்சி அடுத்த ஆனைமலை, கோட்டூர், முத்தூர், கிணத்துக்கடவு, ராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கப்படுகிறது என்றார்.

**கோவையில் குவியும் குண்டுரக மாம்பழங்கள்**

பதிவு செய்த நாள் : மே 02,2011,21:22 IST

கோவை : உள்ளூரில் விளையும் பல வகையான மாம்பழங்கள் கோவை மார்க்கெட்டில் விற்பனைக்கு வந்துள்ளது. கோவை புறநகர் பகுதியில் அனைத்து வகை மாம்பழங்களும் பயிராகின்றன. இந்த ஆண்டு இவை நல்ல விளைச்சலை கொடுத்துள்ளதால் அனைத்து வகை மாம்பழங்களும் குறைந்த விலையில் கிடைக்கிறது. கோவையை அடுத்துள்ள பொள்ளாச்சியின் சுற்றுப்புற கிராமங்களான சேத்துமடை, ஆனைமலை, கோட்டூர், கொழிஞ்சாம்பாறை ஆகியபகுதிகளும் வாளையார், ரங்கசமுத்திரம், வேலந்தாவளம் ஆகிய பகுதிகளும் மாந்தோப்புகள் சில ஆண்டுகளுக்கு உருவாயின. இவை நல்ல விளைச்சலை கொடுத்துள்ளன. மாம்பழத்தில் மிகவும் உயர்வானதாகவும் அதிக சுவையுடையதாகவும் கருதப்படும் இமாம்பசந்த், ஆந்திரா குண்டு, சேலம் குண்டு போன்றவையும் கோவையில் பயிராகின்றன. அல்போன்சா, மல்கோவா, பங்கனப்பள்ளி, நடுச்சாலை, செந்தூரம், கிளிமூக்கு ஆகியவையும் கோவையில் விளைகின்றன. இது குறித்து உக்கடத்திலுள்ள மாம்பழ வியாபாரிகள் கூறுகையில்,""கோவை சுற்றுப்புற

பகுதிகளிலேயே அனைத்து மாம்பழ வகைகளும் கிடைப்பதால் விலை குறைவாக விற்பனையாகிறது. ""ஆப்போஸ் கிலோ ரூ. 35க்கும், பங்கனப்பள்ளி ரூ. 35க்கும், நடுச்சாலை ரூ. 32க்கும், குண்டு ரூ. 45க்கும் செந்தூரம் கிலோ ரூ. 20 க்கும், கிளிமூக்கு ரூ.15க்கும், இமாம்பசந்த் ரூ.45 க்கும், மல்கோவா ரூ.45 க்கும் விற்பனையாகிறது. ""இமாம்பசந்த் மற்றும் மல்கோவா ரக மாம்பழங்கள் கிலோ ரூ. 50 முதல் 60 வரை விற்பனையாகும். கோவையிலிருந்தும், வெளியூரிலிருந்தும் அதிக அளவு விற்பனைக்கு அதிக அளவு வருவதால் விலை குறைவாக விற்பனை செய்யப்படுகிறது,"என்றார்.

**பருத்தி வரத்து அதிகரிப்பு ரூ.1.52 கோடிக்கு வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : மே 02,2011,23:10 IST

அவிநாசி : அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு வரத்து அதிகரித்திருந்தது; ரூ.1.52 கோடிக்கு வர்த்தகம் நடந்தது. அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு 8,600 மூட்டைகள் வரத்தாக இருந்தன. இது, கடந்த முறை நடந்த ஏலத்தை காட்டிலும் 1,500 மூட்டைகள் அதிகம். வரத்து அதிகரித்துள்ள நிலையிலும், பஞ்சு மார்க்கெட்டில் விலை குறைந்திருப்பதால், அனைத்து பருத்தி ரகங்களின் விலையும் குறைந்து விட்டது. ஏலத்தில் அனைத்து ரக பருத்தி விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு: டி.சி.எச்., ரகம் ரூ.5,500 முதல் ரூ.6,200 வரை, ஆர்.சி.எச்., ரகம் ரூ.4,500 முதல் ரூ.5,500 வரை, எல்.ஆர்.ஏ., ரகம் ரூ.4,000 முதல் ரூ.4,500 வரை மற்றும் மட்ட ரகம் ரூ.1,800 முதல் ரூ.2,100 வரை.ஏலம் குறித்து சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது:பருத்தி வரத்து நன்றாக இருந்தது. மார்க்கெட்டில் பஞ்சு விலை குறைந்ததால், அனைத்து ரகங்களும் குவிண்டாலுக்கு ரூ.2,000 வரை விலை குறைந்து விட்டது. ஏலம் விற்பனை களத்தில் பருத்தி மூட்டைகளை வியாபாரிகள் இன்னும் வைத்திருப்பதால், நாளை (4ம் தேதி) நடக்கஇருந்த பருத்தி ஏலம் ரத்து செய்யப்படுகிறது. அடுத்த ஏலம் குறித்து பின்னர் அறிவிக்கப்படும், என்றார்.

## *துரித உணவுகளை தயாரிப்பது எப்படி? வேளாண் பல்கலைக்கழகத்தில் பயிற்சி*

*கோவை, மே.3–*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் துரித உணவு வகைகளை தயாரிப்பது குறித்த பயிற்சி வருகிற 10 மற்றும் 11–ந் தேதிகளில் நடக்கிறது. இதில் பேக்கரி பொருட்களுக்கு அடிப்படையான துரித உணவுகள், காலிபிளவர், காளான் மற்றும் பூரி உணவு வகைகள், இனிப்பு துவையல் தயாரிப்பது குறித்த பயிற்சி வழங்கப்படும். இந்த பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் ரூ.1,000 செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயரை பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சி கட்டணத் தொகையை வரைவோலை மூலம் முதல்வர், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்ற பெயரில் கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்துமாறு எடுத்து பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பதிவு செய்து கொள்ள இறுதி நாள் வருகிற 10–ந் தேதி ஆகும்.*

*இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.*

## *சென்ற நிதி ஆண்டில் காபி ஏற்றுமதி 60 சதவீதம் வளர்ச்சி*



பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் காபி ஏற்றுமதி அதற்கு முந்தைய நிதி ஆண்டைக் காட்டிலும் 60 சதவீதம் அதிகரித்து 3.25 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இந்திய காபிக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைக்கிறது. இதனை வெளிப்படுத்துகின்ற வகையில் ஒரு கிலோ காபி கொட்டைக்கு கிடைத்த விலை ரூ.106–லிருந்து ரூ.116–ஆக உயர்ந்துள்ளது.

இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களிலும் காபி ஏற்றுமதியில் விறுவிறுப்பு ஏற்பட்டுள்ளது. அதேசமயம், காபி ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறைக்கப்பட்டுள்ளன. எனவே, ஜூலை மாதத்திலிருந்து ஏற்றுமதி சற்று குறையும் என வர்த்தக நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், சர்வதேச அளவில் காபி உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் பிரேசில், கொலம்பியா போன்ற நாடுகளில் காபி உற்பத்தி சரிவடைந்துள்ளது. இது, இந்திய காபி ஏற்றுமதியாளர்களுக்கு சிறந்த வாய்ப்பை உருவாக்கும்.

இந்நிலையில், உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் காபி விலை உயர்ந்து வருகிறது. நம் நாட்டிலும் பருவநிலை கோளாறுகளால் காபி உற்பத்தி சரிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.